00041

இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
முன்பள்ளிப் பருவ உயர்தராதரப்பத்திர நிகழ்ச்சித் திட்டம் 2018/2019
இறுதிப் பரீட்சை – 2020
**EPC2421/EPA2421/ESE2221 – பொருத்தப்பாட்டு பிரச்சினைகள்**

பகுதி – I இல் அனைத்து வினாக்களுக்கும் பகுதி – II இல் எவையேனும் மூன்று (03) வினாக்களும் விடையளிக்குக.

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

| திகதி: 19.07.2020 | நேரம்: பி.ப.01.30 – பி.ப.4.30 |
|---|---|

## பகுதி – I

1. **'பொருத்தப்பாட்டு பிரச்சினைகள்'** எனும் பதத்தை விளக்குக.

2. **'இடிப்பஸ் சிக்கல்'** என்பதால் நீர் விளங்கிக் கொள்வது என்ன?

3. எரிக் எரிக்சனின் கருத்துப்படி சமூகம் தொடர்வில் பிள்ளைகளிடம் ஏன் நம்பிக்கையின்மை ஏற்படுகின்றதென்பதை விளக்குக.

4. பிள்ளை விருத்தியில் ஆக்ரோசமான நடத்தையின் **மூன்று(3)** பாதிப்புக்கள் பற்றிச் சுருக்கமாக விளக்குக.

5. அதிகூடியளவு வெட்கப்படும் தன்மையுள்ள பிள்ளைகளின் நடத்தைகளை இழிவளவாக்க உதவக் கூடிய **மூன்று(3)** முறைகளை சுருக்கமாக விளக்குக.

6. தொழிலி நிபந்தனைப்பாட்டுக்கமைவாக பிள்ளைகளிடம் கற்றலை எவ்வாறு ஊக்குவிப்பீர் என்பதனைக் கூறுக.

7. மிகநெருங்கிய உறவினர்கள் இல்லாத பிள்ளைகளிடம் நிறுவமையமாக்கலின் நேர்மறை செல்வாக்குப் பற்றி விளக்குக.

8. நடத்தை மாற்றங்களின் படிமுறைகளைப் பட்டியலிடுக.

**(8x5 = 40புள்ளிகள்)**

## பகுதி – II

9. i. பிள்ளைகளிடம் பொருத்தப்பாட்டு இடர்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் பாடசாலை தொடர்பான காரணிகளை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. அனுபவமுள்ள ஆசிரியர் என்ற வகையில் ஒரு புதிய ஆசிரியருக்கு பொருத்தப்பாட்டு இடர்பாடுள்ள பிள்ளைகளை எவ்வாறு கையாளுவீர் என்பதற்கு ஆலோசனை வழங்குவீர்.

**(10 புள்ளிகள்)**

10. i. எரிக் எரிக்சனால் முன்வைக்கப்பட்ட உளசமூக விருத்தியின் முதல் மூன்று படிமுறைகளைக் சுருக்கமாகத் தருக.

**(10 புள்ளிகள்)**

ii. மேலே விபரித்த உளசமூக விருத்திப்படி ஒன்றைக் தெரிவு செய்து, அப்படிநிலையில் பிள்ளையின் ஆளுமை விருத்தியில் ஏற்படக் கூடிய எதிர்மறை விளைவுகளை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

11. i. ஆதிக்கம் செய்யும் பெற்றோரியல் பாணி பற்றி விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. பிள்ளை விருத்தியில் ஆதிக்கப் பெற்றோர் பாணியின் விளைவுகள் (பாதிப்புக்கள்) என்ன?

**(10 புள்ளிகள்)**

12. i. விளையாட்டுச் சிகிச்சை என்பதை உங்கள் சொற்களில் வரைவிலக்கணப்படுத்துக.

**(8 புள்ளிகள்)**

ii. விளையாட்டுக்கும் விருத்திக்குமிடையிலான தொடர்பை விளக்குக.

**(12 புள்ளிகள்)**

13. i. அவதானிப்புக் கற்றல் கொள்கையின் அடிப்படைக் கருத்தை உதாரணங்கள் தந்து விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. அவதானிப்புக் கற்றற் கொள்கைக்கமைவாக பிள்ளைகளை விரும்பத்தக்க, விரும்பத்தகாத நடத்தைகளை எவ்வாறு கற்கின்றார்கள் என்பதை விபரிக்குக.

**(10 புள்ளிகள்)**

14. i. பிள்ளைகளிடம் நேர்மறை, எதிர்மறை நடத்தைகளை விருத்தி செய்வதில் தொலைக்காட்சியின் பாதிப்பை விளக்குக.

**(10 புள்ளிகள்)**

ii. பிள்ளைகளிடம் தொலைக்காட்சி மூலம் ஏற்படும் எதிர்மறைப் பாதிப்பை எவ்வாறு நீர் இழிவளவாக்குவீர்.

**(10 புள்ளிகள்)**